# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.78/2023

Deposition of witness for DW1

| | | |
|---|---|---|
| Name | : | முருகேஸ்வரி |
| Father's Name | : | குட்டிச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.04.2026.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன். எனது தரப்பில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனது தந்தை, தாயின்பெயர் குட்டிச்சாமி, மாரியம்மாள் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு பிறந்தவர்கள் நான், கலா மற்றும் ராதா ஆகியோர்கள். எனது தந்தை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்துவந்தார் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.6 ஆவணம் பற்றி வழக்கு நடக்கும்போது தான் தெரியும். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தந்தையுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தின்படி வாதிக்கும், எனதுதந்தைக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. எனதுதந்தைக்கும், எனது தாயுக்கும் விவாகரத்து நடைபெறவில்லை.

3. வா.சா.ஆ.10 ஆவணம் பற்றி எனக்கு தெரியும். எனது தாயிடம் எனது தந்தை வாதியை திருமணம் செய்ய அனுமதிகேட்டார் என்றால் சரியல்ல. எனது தாயுக்கும் நல்லையா என்ற நபருக்கும் தொடர்பிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி தொடர்பால் எனது தாய்க்கு ரூ.3000 ஆயிரம் அபராதம் ஏற்பட்டதுஎன்றால் சரியல்ல.

4. வாதி எனது தந்தையின் வாரிசு என்றால் சரியல்ல, அவர் ஏற்கனவே திருமணமானவர், அவருக்கு ஒரு குழந்தையும் உள்ளது. அவரது முதல் கணவர் சுப்பையா தற்போதும் உயிருடன் தான் உள்ளார். அதை நிரூபிக்க எந்த ஆவணமும் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**